# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2161/43 - 2020 පෙබරවාරි මස 07 වැනි සිකුරාදා - 2020.02.07

*2161/43ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆம் உப உறுப்புரையின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் மின்சக்தி இராஜாங்க அமைச்சரின் பொறுப்பிலிருக்க வேண்டிய விடயங்களும் பணிகளும் மற்றும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பன இவ்வறிவித்தல் திகதியிலிருந்து கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இருக்க வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, பெப்புருவரி 7.


1A - G 31962 — 382 (2020/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**1. புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் மின்சக்தி இராஜாங்க அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அபிவிருத்தி செய்தல் | 1. இலங்கை மின்சாரக் கம்பனி | • (2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) இலங்கை மின்சாரச் சட்டம் |
| 2. சூரிய வலுசக்திக் கருத்திட்டங்களின் செயற்படுத்துகை | 2. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி | • (2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைச் சட்டம் |
| 3. கிராமிய மின் வலுப்படுத்துகை | 3. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை | |
| 4. விசேட முன்னுரிமைகளாக இனங்காணப்பட்ட (LNG) மின்சக்திக் கருத்திட்டங்கள், திரவத்தன்மையுடைய இயற்கைவாயு, நிலக்கரி மின்சக்திக் கருத்திட்டங்கள் என்பவற்றை துரிதமாக நிர்மாணித்தலும் செயற்படுத்துதலும் | | |
| 5. சூரிய, நீர், கழிவுப்பொருட்கள் மற்றும் காற்று முதலிய மூலவளங்களின் மூலம் புதுப்பிக்கத்தக்க சக்தி, மின்சக்தி மற்றும் வலுசக்திகளை உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்ச்சிகளும், திட்டமிடலும் அபிவிருத்தியும் கண்காணிப்பும் | | |